ஏப்ரல்



# 4. வெற்றியின் பாதை

## முன்னுரை

பொதுவாக ஏப்ரல் மாதத்திற்கு சற்று முன்னதாகவோ, அல்லது ஏப்ரல் மாதத்திலோ தான், நம் விசுவாசத்தின் மறைபொருளைப் பறைசாற்றும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பினை நினைவுகூறும் புனிதவாரத்தை தாயாம் திருஅவையோடு சேர்ந்து நாம் கொண்டாடுவோம். புனிதவார வெள்ளியன்றும், அதற்கு முந்தைய தவக்கால வெள்ளிக்கிழமைகளிலும் இயேசுவின் பாடுகளை தியானிப்பது காலங்காலமாய் இருந்து வருகிற பயனுள்ள பக்தி முயற்சி. ஆனால் தவக்காலத்தைத் தொடர்ந்து வரும் உயிர்ப்புக்காலத்தில் சிலுவைப்பாதை செய்தால் எப்படியிருக்கும்? பாஸ்கா காலத்தில் பாடுகளின் பாதையா? அபத்தமாக உள்ளதே என நம்மில் சிலர் நினைக்கக் கூடும். அதற்குக் காரணம் சிலுவைப்பாதையை ஒருவிதமான வியாகுலத்தோடும், வேதனையோடும் மட்டுமே நாம் தியானிக்க முயல்கிறோம். உண்மையில் இயேசுவின் சிலுவைப் பயணம் வெற்றிப் பயணம், வீரப் பயணம், வலுவூட்டும் பயணம். இந்தப் பாஸ்கா காலத் திருச்சிலுவைப் பாதை இந்த உண்மையை நமக்கு உணர்த்தட்டும். வெற்றிவேந்தரான உயிர்த்த இயேசு சொல்லுவதைக் கேட்டவர்களாய் இந்த வெற்றியின் பாதையில் பயணிப்போம்.

◆

✦ <u>முதல் நிலை</u>

## இறைவனின் திட்டம் வென்றிடும் காட்சி

***யா***ர் சொன்னது நான் தண்டிக்கப்பட்டு தோற்றுவிட்டேன் என்று? என்னை சாவுக்குத் தீர்ப்பிட்டவரைப் பார்த்தே நான் சொன்னேன், “மேலிருந்து அருளப்படாவிடில் உமக்கு என்மேல் எந்த அதிகாரமும் இராது” என்று. (யோவா.

19:11) உண்மையும் அதுதான். பன்னிரண்டு வயதிலேயே ஞானத்தோடு பேசப் பழகியவன் நான். பெரும்பான்மையான மக்களை என் பேச்சால் வியக்க வைத்தவன் நான். வாதாட வந்த பலரை வாயடைக்கச் செய்தவன் நான். என்னால் இந்தத் தீர்ப்பை தவிடுபொடியாக்கி இருக்க முடியும். ஆனால், அதை நான் செய்யாததற்குக் காரணம் எனக்கு வழங்கப்பட்ட தீர்ப்பை நான் பிலாத்துவிடமிருந்து வந்ததாகப் பார்க்கவில்லை. என் தந்தையாம் கடவுளிடமிருந்து வந்ததாகத் தான் பார்த்தேன். எனக்குத் தெரியும். அவர் நல்லதைத் தவிர வேறொன்றை என் வாழ்க்கைக்குள் அனுமதிக்க மாட்டார் என்று.

என் மகனே! மகளே! மனிதருள் பலரைப் பார்த்து நான் மகிழ்ந்து போகிறேன். "நான் ஏன் கருப்பாகப் பிறந்தேன்? நான் ஏன் ஏழையாகப் பிறந்தேன்? நான் ஏன் ஒரு மாற்றுத் திறனாளியாகப் பிறந்தேன்? எனக்கு ஏன் இந்த நோய்? நான் ஏன் இந்த சாதியில் பிறந்தேன்? எனக்கு ஏன் இந்த அநியாயம்?" என ஆயிரம் கேள்விகளைக் கேட்க முடியுமென்றாலும் அவை அனைத்தையும் புறந்தள்ளிவிட்டு, தாம் இருப்பது போலவே தம்மை ஏற்றுக்கொண்டு வெற்றி பெற்ற மனிதர்களை நினைத்து நான் பெருமை அடைகிறேன். நீயும் அப்படித்தான் வாழவேண்டும் என விரும்புகிறேன். அநியாயத் தீர்ப்பையே நான் ஏற்றுக்கொண்டேன். உன்னையே நீ ஏற்றுக்கொள்ள என்ன தயக்கம்? ஒன்றை மட்டும் நினைவில் கொள்: "என் பார்வையில் நீ விலையேறப் பெற்றவன்; மதிப்புமிக்கவன். நான் உன்மேல் அன்பு கூர்கிறேன்." (எசா. 43:4)

## செபம்

வெற்றியின் நாயகனாம் இயேசுவே! மேலிருந்து அருளப்பட்ட அனைத்தையும் ஏற்றுக்கொள்ளுகிற நல்மனமே வெற்றியின் இரகசியம் என்று என்னை உணரச் செய்தருளும்.

◆

## வெற்றியின் ஆயுதம் வீரனின் கையில்

யார் சொன்னது சிலுவை என்மேல் திணிக்கப்பட்டது என்று? எனக்காகக் குறிக்கப்பட்ட சிலுவையை நான் அரவணைத்துக் கொண்டேன். "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" (மாற். 8:34) என்று என் சீடர்களுக்குச் சொன்ன நான் என் சிலுவையைப் பார்த்து அஞ்சுவேனா என்ன? அந்தச் சிலுவையை நான் பளுவாகப் பார்க்கவில்லை; மீட்பின் கருவியாகப் பார்த்தேன். அவமானத்தின் சின்னமாய் இருந்த சிலுவை, இன்றைக்கு ஆராதனைக்குரிய சின்னமாய் மாறி யிருப்பதற்குக் காரணம் நான் அந்தச் சிலுவையை அன்போடு ஏற்றுக் கொண்டதுதான்.

என் மகனே! மகளே! முணுமுணுக்காமல் தங்கள் அன்றாடச் சிலுவைகளைச் சுமக்கும் பலரைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். தன்னலம் மறந்து தம் சிலுவையைத் தூக்கிச் செல்லும் பலரால்தான் இந்த உலகமும், இந்த உலகிற்கான என் திட்டமும் இதுவரை இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒன்பது மாதம் கருவில் சுமக்க தன்னலமற்ற தாய்மார்கள் இருப்பதனால்தான் என்னால் மனித இனத்தை விருத்தி அடையச் செய்ய முடிகிறது. பொறுப்புகளைச் சுமக்கும் தந்தையர், பொதி சுமக்கும் தொழிலாளர்கள், பழிகளைச் சுமக்கும் புரட்சியாளர்கள், கடமைகளைச் சுமக்கும் தலைவர்கள், மானுட முன்னேற்றத்திற்கான முன்னெடுப்புக்களைச் சுமக்கும் ஆசிரியர்கள், அறிஞர்கள், அறிவியல் ஆராய்ச்சியாளர்கள், ஆன்மீக வாதிகள், சமூக ஆர்வலர்கள், சீர்திருத்தவாதிகள், முன்களபணியாளர் என சுமப்பவர்களின் பட்டியல் நீண்டு கொண்டேபோகும். கடினமான பலவற்றை சுகமான சுமைகளாகக் கருதும் பலரால்தான் இவ்வையகமும், மானுடமும் வாழ்வடைந்து வளர்ச்சியடைந்து வருகின்றன. உன்னையும் அப்படித்தான்

பார்க்க விரும்புகிறேன். சிலுவையைச் சுமக்கத் தயங்காத என்னைப்போல் கடமைகளைச் சுமக்கத் தயங்காத வீரமகனாய், வீரமகளாய் நீ இருப்பாயா? நினைவில் கொள். “உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு, எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின்மீது வெற்றி கொண்டுவிட்டேன். (யோவா. 16:33)

**செபம்**

வெற்றியின் நாயகனாம் இயேசுவே! கடமைகளைச் செய்யத் துணிவதே வெற்றியின் ஆயுதம் என்று என்னை உணரச் செய்தருளும்.

◆

✦ **மூன்றாம் நிலை**

## விழுவதுதான் வெற்றிக்கான முதற்படி

யார் சொன்னது நான் எழமுடியாமல் விழுந்தேனென்று? இல்லையில்லை. நான் எழுவதற்காகவே விழுந்தேன். விழுவதுதான் வளர்வதற்கான ஒரே வழி; அதுவே வளமைக்கான வித்தும்கூட. விழுகின்ற மழைத்துளி இல்லையெனில் உலகம் வறண்டு விடும். வீழ்கின்ற அருவி இல்லையெனில் ஆர்ப்பரிக்கும் ஆறுகள் இல்லை. விழுகின்ற விதைகள் இல்லையெனில் பலன்தரும் பயிர்கள் இல்லை, செழுமையான மரங்கள் இல்லை, செழிப்பானக் காடுகள் இல்லை. விழுகின்ற வியர்வைதான், உழைப்பவரின் உயர்வுக்கு உரம். எனவே தான் நானும் விழுந்தேன், எழுவதற்காக. நான் மட்டும் எழுவதற்காக அல்ல; உன்னையும் உலகையும் எழுச்சிபெற்று எழும்ப வைத்திடவே விழுந்து எழுந்தேன்.

இவ்வுலகில் வீழ்ந்தும் விடாப்பிடியாய் முயன்றவர்களைப் பார்த்து நான் வியந்திருக்கிறேன். தான் வெற்றியடையும் வரை, பலநூறு முறை தவறான உலோகங்களால் மின்விளக்கைத் தயாரிக்க முயன்ற தாமஸ் ஆல்வா எடிசன் தொடங்கி,

தெருப் பந்தயங்களிலே ஜெயிக்கத் துடிக்கும் ஒரு சிறுவன் வரை, மனிதர்கள் பலர் மேற்கொள்ளும் இடைவிடா முயற்சிகள் எனக்கு வியப்பை மட்டுமல்ல உவப்பையும் தருகின்றன. இவ்வளவு ஏன்? ஒரு சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொண்டபோது, நீ விழுந்த ஒவ்வொரு முறையும் உன் தந்தையைப் போல நானும் நம்பினேன், “இது சாதாரண வழுக்கல்தான். என் மகன், மகள் எழுந்து விடுவான் / எழுந்து விடுவாள் என மனதார நம்பினேன். வாழ்க்கையில் நீ விழுகின்ற ஒவ்வொரு தருணத்திலும் உன் வலியில் நான் உன்னோடு பங்கெடுக்கிறேன். ஆனால் அத்தோடு நான் நின்றுவிடுவதில்லை. பலமுறை விழுந்து, இறுதியில் உயிர்த்த எனது வெற்றியில் உனக்கும் பங்குதரக் காத்திருக்கிறேன். கலங்காதே. இந்த விவிலியச் சொற்றொடரை அடிக்கடிச் சொல்லி அதனையே வெற்றியின் தாரக மந்திரமாகக் கொள். “எனக்கு வலுவூட்டுகிறவரின் துணை கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு. (பிலி. 4:13)

**செபம்**

வெற்றியின் நாயகனாம் இயேசுவே! பலமுறை விழுவதும், விழுந்து எழுவதும்தான் வெற்றியின் முதற்படி என்று என்னை உணரச் செய்தருளும்.

◆

✦ நான்காம் நிலை

# வெற்றிக்கு உறுதுணையாய் ஒரு சிலர்

யார் சொன்னது என் அன்னை நிலைகுலைந்து போனார் என்று? மனம் கலங்கினாள், குமுறினார் என்பதெல்லாம் உண்மைதான். ஆனால் நிலைகுலையவில்லை. அவருக்குத்தெரியும், தனது “உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவிப் பாயும்” என்பது. (லூக். 2:35) அதற்கும் சேர்த்துத்தான் “ஆகட்டும்” என்று சொல்லியிருந்தார் என் தாய் மரியா. உளி ஏற்படுத்தும்

வலிக்கு அஞ்சுகிற எந்தக் கல்லும் சிற்பமாகாது. வியர்வைக்கும், பயிற்சிக்கும், உழைப்புக்கும் அஞ்சுகிற யாராலும் வெற்றிக் கனியை அடைய முடியாது. இது உலக நியதி மட்டுமல்ல; கடவுளின் திருவுளமும் அதுதான். அதனால்தான், அவரது திருவுளப்படி நானும் என் தாயாரும் துயரத்தைச் சந்திக்கிறோம்; அதைப் பங்கு போட்டுக் கொள்கிறோம்.

எனது கல்வாரிப் பயணத்தின்போது உடன் வந்து உறுதுணையாய் இருந்த என் தாய் எனக்கு ஏற்படுத்திய அதே உற்சாகத்தை உங்களில் பலரும் எனக்கு ஏற்படுத்துகின்றீர்கள். தேர்வுக்காகத் தயாரிக்கும் பிள்ளை அருகில் கண் விழித்திருக்கும் தாய், தொடர் பயிற்சியில் ஈடுபட்டுள்ள தன் மகனோடு ஓடிக் கொண்டிருக்கும் தந்தை, குடும்பத்தை மேம்படுத்த ஓடாய்த் தேயும் கணவனுக்கு மனைவியும், மனைவிக்குக் கணவனும் கொடுக்கிற ஒத்துழைப்பு, நீதிக்காகக் குரல் கொடுப்போருக்கு பக்க பலமாக அருகில் இருப்போர், சமூகத்திற்காகத் தங்களையே சக்கையாகப் பிழிவோரின் சகபயணிகளாக இருப்பவர்கள் என என்னால் அடுக்கிக் கொண்டே போகமுடியும். இவர்கள் எல்லாம் என் அன்னையைப் போன்று உடன் பயணிப்பவர்கள். ஒரு வகையில் இவர்களும் என் தந்தையின் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு உறுதுணையாய் இருப்பவர்கள். நீயும் அப்படி இருப்பது தான் என் விருப்பம். எனவேதான் என் அடியார் தூய பவுல் மூலம் சொன்னேன். “ஒருவர் மற்றவருடைய சுமைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள். இவ்வாறு கிறிஸ்துவின் சட்டத்தை நிறைவேற்றுவீர்கள்.” (கலா. 6:2)

## செபம்

வெற்றியின் நாயகனாம் இயேசுவே! வெற்றிக்கு உறுதுணையாய் ஒரு சிலரைப் பெற்றிடவும், பிறரது வெற்றிக்கு நான் உறுதுணையாய் இருந்திடவும் தேவையான அருள் தாரும்.

◆

# பணிவோடு பகிரப்பட வேண்டியது வெற்றி

யார் சொன்னது சீமோனின் உதவி என் இயலாமையை வெளிப்படுத்தியது என்று? நிச்சயம் இல்லை. அது எனது பங்களிக்கும் மனப்பான்மையை வெளிப்படுத்தியது. உதவி அளிப்பதும் உதவி பெறுவதும் தான் மனிதன் ஒரு சமூகப் பிறவி என்பதற்கு அடையாளம். நான் கடவுளின் மகனாக இருந்தாலும், மனுமகனாய் வலம் வந்தபோது உதவியளிப்பதையும் உதவி பெறுவதையும் ஒரு இயல்பான செயலாகவே கருதினேன். “என்னால் எல்லாம் முடியும்” என்கிற இறுமாப்பு என்னிடம் இல்லை. “உன் வேலையைப் பார். இதை நான் பார்த்துக் கொள்கிறேன்” என்று பிறரை உதறித் தள்ளுகிற உதாசீனமும் என்னிடம் இல்லை. என் பணியில், என் வேதனையில், என் வெற்றியிலும்கூட பிறரைப் பங்குதாரர் ஆக்கிக் கொள்ளவே விரும்பினேன். எனவே தான் கட்டாயத்தின் பேரில் கிடைத்த உதவியைக்கூட கனிவோடு ஏற்றுக்கொண்டேன்.

இன்றைக்கும் மானுடத்தின் மீது நான் நம்பிக்கை இழக்காமல் இருப்பதற்குக் காரணம் உதவும் கரங்கள் மட்டுமல்ல, உதவி கேட்க வெட்கப்படாத பரந்த மனங்களும்தான். வெற்றி பெற்றவர்களைக் கண்டு நான் மகிழ்வதைவிட தங்கள் வெற்றியில் பிறரது உழைப்பும், பங்களிப்பும் உண்டு என்பதைப் பிரகடனம் செய்யத் தயங்காத உயர்ந்த உள்ளங்களைக் கண்டு தான் அதிகம் மகிழ்ச்சி அடைகிறேன். ஏழைகளுக்கும், கைவிடப்பட்டோருக்கும் உதவிய அன்னைத் தெரசா, எட்ட முடியாத உயரத்தை எட்டிய போதும், ஏழையரின் பெயரால்தான் தனக்களிக்கப்பட்ட விருதுகளைப் பெற்றுக்கொண்டார். திருஅவையின் தலைவராம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை மனுக்குலம் முழுவதுமே போற்றுவதற்கும், நாம் அவர்களை மெச்சுவதற்கும் காரணம்

மேட்டுமை குணம் இல்லாமல், தன்னையும் பிறரோடு சகப்பயணியாகக் கருதுகிற நற்பண்புதான். உன்னிடமும் அதைத்தான் எதிர்பார்க்கிறேன். “வீண் பெருமைக்கு இடம் தர வேண்டாம். மனத்தாழ்மையோடு மற்றவர்களை உங்களிலும் உயர்ந்தவர்களாகக் கருதுங்கள்.” (பிலி. 2:3)

**செபம்**

வெற்றியின் நாயகனாம் இயேசுவே! பிறரது உதவியைப் பெறுவது இயலாமையின் வெளிப்பாடு அல்ல என்பதையும் வெற்றியைப் பிறரோடு பகிர்வது தான் பெருமை என்பதையும் நான் உணரச் செய்தருளும்.

◆

✦ **ஆறாம் நிலை**

## வெற்றியின் வெளிப்பாடு நன்றியுடைமை

யார் சொன்னது வெரோனிக்காவின் செயல் சிறியது என்று? காலத்தினாற் செய்த நன்றி ஞாலத்தின் மாணப் பெரிது என்பது உனக்கும் தெரியும். எனக்கும் தெரியும். எனது மூன்று வருட பணிவாழ்வில் எத்தனைபேரை பகிரங்கமாய்ப் பாராட்டியிருக்கிறேன் என்பதை நீ பட்டியலிட்டுப் பார்த்தால் தெரியும். விதவையின் காணிக்கை தொடங்கி வீரனின் விசுவாசம் வரை பல நிகழ்வுகளும், பல மனிதர்களும் என் அங்கீகாரத்தைப் பெறத் தவறியதில்லை. இப்போதும், இந்தச் சிலுவைப் பாதையின் போதும் வெரோனிக்காவின் கனிவு மட்டுமல்ல, அவளது வீரமும் என்னை வியக்க வைத்தன. வாய்விட்டுப் பாராட்ட நினைத்தேன். ஆனால் அது காற்றோடு கரைந்து விடும் என்பதால் அழியா முத்திரையாய் ஒன்றைப் பரிசளிக்க விரும்பினேன். காலகாலமாய் நினைவு கூறப்பட வேண்டிய தீரச்செயலாய் நான் அதனைக் கண்டதால், எனது அங்கீகாரத்தின் அடையாளமாகவும், நன்றியின் நிலைபெயரா நினைவாகவும், என் திருமுகத்தை அவளது துகிலிலே

பதித்தேன். நன்றியுணர்வும் தெய்வீகத்தின் ஒரு சாயல் என்பதை மறந்து விடாதே.

இன்றைக்கும் செய்ந்நன்றி மறவாத செம்மையான மனிதர்களைப் பார்த்து நான் பரவசம் அடைகின்றேன். உயர்கல்வி பெற்றிருந்தாலும், உன்னதப் பதவிகளை எட்டி யிருந்தாலும், உயர்த்திவிட்ட பெற்றோரையும், உடனிருந்த நண்பர்களையும், உலகுக்கீந்தத் தாய்த் திருநாட்டையும் மறந்து போகாமல், விட்டுவிலகாமல், செஞ்சோற்றுக் கடன் தீர்க்கும் பலரால்தான் இவ்வுலகில் மனிதம் இன்றும் தன் சாயலை இழக்காமல் இருக்கிறது. இந்தக் கணினி யுகத்திலும், தன் கிராமத்துப் பின்னணியை மறக்காமல் இயற்கையையும், இயற்கைசார் தொழில்களையும் நேசித்து நன்றி பாராட்டும் சிலரால் தான் என்றைக்கோ அழிந்திருக்க வேண்டிய இந்த ஆழிசூழ் உலகம் தன் இயக்கத்தை இழக்காமல் இருந்து வருகிறது. நீயும் அப்படி இருக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை. என்னைப்போல் நன்றியுடையவனாய் இரு. நீ பிறந்த மண்ணை நேசி. உனக்கு உதவிய மனிதர்களை மறவாதே. “எல்லாவற்றிற்காகவும் எப்போதும்... நன்றி செலுத்துங்கள்.” (எபே. 5:20)

**செபம்**

வெற்றியின் நாயகனாம் இயேசுவே! நன்றியுடையமை வெற்றியின் வெளிப்பாடு மட்டுமல்ல, இறைச்சாயலின் வெளிப்பாடும்தான் என்று என்னை உணரச் செய்தருளும்.

◆

✦ ஏழாம் நிலை

# தொடர் முயற்சியே வெற்றியின் சூட்சுமம்

யார் சொன்னது - நான் பரிவுக்காகப் பரிதவித்தேனென்று? உதவிகளை ஏற்க நான் தயங்கியதில்லை என்பது எத்துணை உண்மையோ, அத்துணை உண்மை நான் உதவிக்காகவே காத்திருக்கும் உதவாக்கரைகளின் கூட்டத்தில் ஒருவன் அல்ல

என்பது. தடுமாறிய போதெல்லாம் புதுத்தெம்புடன் எழுந்திடவே முயன்றேன். விழுந்தபோதெல்லாம் எழுந்து என் பயணத்தைத் தொடர மேலும் வீரியமாக ஓடவே முயன்றேன். தன்கையே தனக்குதவி என்பதுதான் வெற்றியின் சூட்சமம் என்பதும், தொடர் முயற்சிதான் வெற்றியின் இரகசியம் என்பதும் எனக்கு நன்றாகவே தெரியும்.

அதே உள்ளத் தெளிவோடு இவ்வுலகில் பயணிக்கும் பலரைக் கண்டு நான் பெருமிதம் அடைகிறேன். கண் பார்வை இழந்திருந்தாலும் கைத்தடியை வைத்துக் கொண்டு சுயதொழில் புரிவோரைப் பார்த்தும், செவிப் புலனை இழந்திருந்தாலும் செம்மையான தம் படைப்புகளால் உலகைச் செழுமையுறச் செய்வோரையும், உடல்உறுப்புகளில் சில செயலிழந்திருந்தாலும் சாதனைச் சிகரங்களை விளையாட்டு உட்பட பல்வேறு துறைகளில் எட்டுவோரையும் பார்த்து நான் நெஞ்சை நிமிர்த்தி இருக்கிறேன். என்றைக்கோ வாழ்ந்து மறைந்த மில்டனும், பீத்தோவனும் மட்டுமல்ல, இன்றைக்கும் இரயில் பெட்டிகளில் இரந்து வாழ்வதற்குப் பதிலாக உழைத்து வாழ்பவர்கள் எல்லோரும் சாதனையாளர்களே! சவால்களைக் கண்டு சளைக்காமல் போராடும் அத்தனை பேரும் என் கண்களில் சாதனையாளர்களே! நீயும் அப்படித்தான் இருக்க வேண்டும். சூழலின் மீதும், சுற்றத்தின் மீதும், இரக்கமற்ற இன்றைய சமூகத்தின் மீதும் பழிபோடுவதை விட்டுவிட்டு என்னைப்போல், நான் மேற்சொன்ன சீலரைப்போல் போராடக் கற்றுக்கொள்; விழுந்தாலும் எழுந்து நட. ஒன்றை மறந்து விடாதே! தம்மை நம்புவோரும் என்னை நம்புவோரும் தோற்றுப் போவதே இல்லை. “ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்திருப்பவர்களே புதிய ஆற்றல் பெறுவர்; கழுகுகள் போல் இறக்கை விரித்து உயரே செல்வர்.” (எசா. 40:31)

### செபம்

வெற்றியின் நாயகனாம் இயேசுவே! தன்கையே தனக்குதவி என்பதையும் தொடர் முயற்சியே வெற்றியின் சூட்சமம் என்பதையும் நான் உணரச் செய்தருளும்.

# உணர்வுகளைக் கடந்த உத்வேகமே உயர்வுக்கு வழி

யார் சொன்னது நான் ஆறுதலுக்காக காத்திருந்தேன் என்றோ? அல்லது ஆறுதலால் ஆசுவாசம் அடைந்தேன் என்றோ? ஒருபோதும் இல்லை. உண்மையைச் சொல்லப் போனால், எனக்கு ஆறுதல் அளிப்பதாக நினைத்துக் கொண்டு அழுத பெண்களைப் பார்த்து நான் அறிவுரைதான் கூறினேன். உணர்வுகளற்ற ஜடங்களாக இருக்க வேண்டும் என்பது என் சித்தாந்தம் அல்ல. நானும்கூடக் கண்ணீர் வடித்தேன். என் நண்பர் இலாசர் இறந்தபோது அழுதேன். எருசலேமின் அழிவைக் குறித்த என் இறைவாக்கு என்னைக் குமுறச் செய்தது. ஆனால் உணர்ச்சிகள் மட்டுமே வாழ்க்கையல்ல; உயர்வுக்கான வழியும் அல்ல என்பது எனக்குத் திண்ணமாய்த் தெரியும். எனவேதான் அழுகையைக் கடந்து ஆக்கப்பூர்வமான செயலுக்கு அழைப்பு விடுத்தேன். அன்றைக்கு மட்டுமல்ல; இன்றைக்கும் தான்.

அந்த அழைப்பினை ஏற்று இன்றைக்கும் பலர் தங்கள் விழிநீரைத் துடைத்துவிட்டு வழிகாட்டும் தீபங்களாய் சுடர்விடத்தான் செய்கிறார்கள். அவர்களைக் குறித்து நான் பெருமிதம் அடைகின்றேன். கைக்குழந்தையோடு வாழ்கின்ற கைம்பெண்கள் எல்லாம் தங்கள் கணவரைப் பறிகொடுத்த போது கண்ணீர் வடிக்காமலா இருந்திருப்பார்கள்? ஆனால், அந்தக் கண்ணீரைக் கடந்து தான் பெற்றக் குழந்தைகளுக்காக வாழ்ந்தே ஆக வேண்டும் என்கின்ற துணிவுதான் அவர்களை இயங்க வைக்கின்றது. தேர்விலும், காதலிலும், வாழ்விலும் தோல்வியுறும் கோழைகள் சிலர் தற்கொலை செய்து கொள்ளும் இதே உலகில், தங்களின் வலிகளையும், வேதனைகளையும் ஒரு பொருட்டாகக் கருதாமல் கர்மவீரர்களாய் செயல்படும் பலரால்தான் இந்தப் பூவுலகு புனிதம் அடைகிறது. உணர்ச்சி மிக்கவனாய் இரு - அதில் தவறில்லை. ஆனால்

உணர்ச்சிகளுக்கு அடிமை ஆகிவிடாதே. உணர்வுகளைக் கடந்த உத்வேகம்தான் வெற்றிக்கு வழி. திருப்பாடல் சொல்வதை நம்பு "நீர் என் புலம்பலைக் களிநடனமாக மாற்றுகிறீர்... என்னை மகிழ்ச்சியால் உடுத்துகிறீர்" (தி.பா. 30:11)

### செபம்

வெற்றியின் நாயகனாம் இயேசுவே! உணர்வுகளைக் கடந்த உத்வேகம்தான் உயர்வுக்கு வழி என்பதை நான் உணரச் செய்தருளும்.

◆

✦ ஒன்பதாம் நிலை

## இடர்களை வென்றிடும் இலட்சியப் பார்வை

யார் சொன்னது நான் தெம்பிழந்து போனேனென்று? உடல் வலுவிழந்தது உண்மைதான். ஆனால் உள்ளமோ ஊக்கம் கொண்டது. மூன்றாம் முறை கீழே விழுந்த நான் மண்ணைப் பார்க்கவில்லை; என்னையும் பார்க்கவில்லை; விண்ணைப் பார்த்தேன். என் விண்ணகத் தந்தை எனக்காகத் தேர்வு செய்திருந்த கல்வாரி முகட்டைப் பார்த்தேன். இது வீழ்ந்து கிடக்கும் நேரமல்ல என்றுணர்ந்து துணிவுடன் எழுந்தேன். இலக்கினை நெருங்கிவிட்டோம் என்கிற ஒற்றைச் சிந்தனை என் இலட்சியப் பயணத்தில் என்னை மேலும் உறுதிப்படுத்தியது. இனி விழுவதில்லை என்கிற உறுதியுடன் தொடர்ந்தேன் என் பயணத்தை.

சோர்ந்து போகாத சிந்தனையாளர்களும், தளர்ந்து போகாத தர்மசீலர்களும், நம்பிக்கை இழக்காத நல்லவர்களும் தங்களது இலட்சியப் பயணத்தை இடர்கள் தாண்டி மேற்கொண்டு வருவதால்தான் இந்தப் பூமிப்பந்து பொலிவுடன்

சுழல்கிறது! கத்தியின்றி, இரத்தமின்றி, யுத்தமொன்றை சத்தியத்தின் வழியில் நிகழ்த்திய மகாத்மா காந்தியாகட்டும், கார்மேகம் சூழ்ந்திருந்த வேளையிலும் கறுப்பு இனத்தவர்க்கும் கனவுகள் உண்டென்று களம் கண்ட மார்ட்டின் லூத்தர் கிங் ஆகட்டும், பூட்டிய இரும்புச் சிறையிலே இருபதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளைச் செலவிட்ட நெல்சன் மண்டேலா ஆகட்டும், இவர்களும் இன்னும் பலரும் தமது இலட்சியப் பயணத்தை வென்றெடுக்க உறுதுணையாய் இருந்தது அவர்களிடமிருந்த தொலை நோக்குப் பார்வையும், இலட்சியத் தெளிவும்தான். உன்னிடமும் அவை இருக்குமென்றால் நீயும் வெற்றி பெறுவாய் என்பது உறுதி. மூன்றுமுறை விழுந்த நான் மரித்த மூன்றாம் நாள் உயிர்த்தேன் என்பது தான் வரலாறு. வாழ்வில் வெற்றி பெறுவதற்கு மட்டுமல்ல, என்னைப் பின் செல்வதற்கும் ஒரு தகுதி அவசியம். "கலப்பையில் கைவைத்தபின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்படத் தகுதியுள்ளவர் அல்ல." (லூக். 9:62)

**செபம்**

வெற்றியின் நாயகனாம் இயேசுவே! இடர்களை வென்றிடும் இலட்சியத் தெளிவும், தொலைநோக்குப் பார்வையும் வெற்றிக்கு அவசியம் என்று நான் உணரச் செய்தருளும்.

◆

✦ **பத்தாம் நிலை**

# சிறுமைப்படுத்துவோரை நாணச் செய்யும் துணிவே வெற்றி

யார் சொன்னது நான் வெட்கித் தலைகுனிந்தேன் என்று? நாணுதற்குரிய செயலைச் செய்தவர்கள் அவர்கள்தான்; நானல்ல. எனவே நான் வருந்தினேன்; ஆனால் வெட்கமுறவில்லை. ஓர் உயரிய நோக்கிற்காக இந்த அவமானத்தையும் நான் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

எனவே மீளாத்துயருடன் இதனை ஏற்றுக்கொண்டேன். ஆனால் ஒன்றைப் புரிந்து கொள். அவர்களால் என் சதையைத்தான் பிய்த்தெடுக்க முடிந்ததேயன்றி சத்தியத்தின் மீது நான் கொண்டிருந்த பிடிப்பினை அல்ல. அவர்களால் என் உடலைத்தான் அவமானப்படுத்த முடிந்ததேயன்றி என் ஆன்மாவின் அந்தரத்தை அவர்களால் அசைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

தீர்க்கமான சிந்தனைகளோடு தெளிவாகப் பயணிப்போரை இந்த உலகம் எவ்வளவு சிறுமைப்படுத்தினாலும், வதைத்தாலும் அவர்கள் வளைந்து கொடுப்பதில்லை. அதனால்தான் இந்த உலகின் மீதும், மானுடத்தின் மீதும் எனக்கு இன்னும் நம்பிக்கை உள்ளது. ஆனால் அதே நேரத்தில், அப்பாவிப் பாலகர்களையும், அபலைப் பெண்களையும் பாலியல் கொடுமைக்கு உட்படுத்தி தங்கள் காமப் பசியினைத் தீர்த்துக் கொள்ளும் காட்டுமிராண்டிகளையும், அவர்களைப் பாதுகாக்கத் துடிக்கும் அதிகார வர்க்கத்தையும் பார்க்கும்போது நான் கோபமுறுகிறேன், குமுறுகிறேன். அதே கோபத்தைத்தான் நான் பாதிக்கப்படுவோரிடமிருந்தும் எதிர்பார்க்கிறேன். வெட்கப்பட வேண்டியவர்கள் அவர்கள் அல்லவா! நீ ஏன் வெட்கப்படவேண்டும்? நீ வெகுண்டெழ வேண்டியவள். அப்படி பாகிஸ்தானில் வெகுண்டெழுந்த மலாலா யூசப்சாய் என்கிற பெண் ஏற்படுத்தியிருக்கும் கல்விப் புரட்சியைப் பார்த்தும், அது போன்ற பலரது தீரச் செயல்களைப் பார்த்தும் நான் பூரிப்படைகிறேன். நீயும் ரௌத்ரம் பழகு. அதுதான் உன் வாழ்வுக்கும், உயர்வுக்கும் வழி. “அஞ்சாதே! நான் உன்னுடன் இருக்கிறேன்... நான் உனக்கு வலிமை அளிப்பேன், உதவி செய்வேன், என் நீதியின் வலக்கரத்தால் உன்னைத் தாங்குவேன்.” (எசா. 41:10)

## செபம்

வெற்றியின் நாயகனாம் இயேசுவே! என்னைச் சிறுமைப்படுத்துவோரை நாணச் செய்யும் துணிவே என்னை வாழவைக்கும், வாழ்வில் வெற்றி தரும் என்பதை நான் உணரச் செய்தருளும்.

# ஒடுக்கப்பட்டாலும் ஓயாதிருந்தால் வெற்றி நிச்சயம்

யார் சொன்னது அவர்கள் என்னை ஒடுக்கி விட்டார்கள் என்று? உண்மைதான், என்னைச் சிலுவையில் அறைந்து அசைவுற முடியாமல் செய்துவிட்டனர். ஆனால் என்னைச் செயல்பட முடியாமல் அவர்களால் ஒடுக்கிவிட முடியவில்லை. முப்பது ஆண்டுகள் மறைவாய் வாழ்ந்து, மூன்று ஆண்டுகள் போதகராய் அலைந்து நான் செய்து முடிக்காததை இந்த மூன்று மணி நேரத்தில் மூன்று ஆணிகளில் தொங்குவதன் மூலம் செய்து முடிக்கப் போகிறேன் என்பது என்னைச் சிலுவையில் அறைந்தவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் சிலுவையில் உயர்த்தப்பட்டவனாய் அனைவரையும் என்பால் ஈர்த்துக் கொள்ளவே இவ்வுலகிற்கு வந்த நான் ஒடுக்கப்பட்டதுபோல் தோன்றினாலும் அப்போதும் ஓயவில்லை.

மானுடச் சரிதையிலும் இத்தகைய நிகழ்வுகள் நடந்தேறும் போது நான் நிம்மதி அடைகிறேன். ஒடுக்கப்பட்ட இனங்கள் விடுதலையின் சுவாசத்தை நுகர்கின்ற போதும், அடிமைப்பட்ட இனங்கள் அதிகாரப் பீடங்களை அலங்கரிக்கும் போதும், முடக்கி வைக்கப்பட்டப் பெண்கள் புரட்சிப் புயல்களாய் புறப்படுகிற போதும், ஒடுக்கப்பட்டபோதும் ஓயாத என்னை அவர்கள் பிரதிபலிக்கின்றனர். இவ்வளவு ஏன்? உன் வீட்டில் முடங்கிப் போனதாய் நீ நினைக்கின்ற முதியோரும், பெரியோரும், நோயாளிகளும்தான் எனது மீட்பின் ஒப்பற்றக் கருவிகள் என்பதை நீ கூர்ந்து கவனித்தால் புரிந்துகொள்வாய். அசைவுறவே சிரமப்படும் அவர்களது அசைவுறா விசுவாசமும், செயல்படவே சிரமப்படும் அவர்களது இடைவிடாத செபங்களும், அனுபவங்கள் வழியாக அவர்கள் தரும் அறிவுரைகளும்தான் உன் குடும்பத்திற்கும், இந்த உலகத்திற்கும் ஆசீர்வாதங்களாக அமைகின்றன. ஒடுங்கிப் போனாலும் ஓயாதிருக்கும் இவர்கள்

வெற்று மனிதர்கள் அல்ல, வாழ்வில் வெற்றிக் கோட்டிற்கு மிக அருகில் உள்ளவர்கள். அவர்கள் சொல்லாமல் சொல்லுகிற இறைவார்த்தை "சாவின் ஆற்றல் எங்களிலும், வாழ்வின் ஆற்றல் உங்களிலும் வெளிப்படுகிறது" (2. கொரி. 4:12)

**செபம்**

வெற்றியின் நாயகனாம் இயேசுவே! ஒடுக்கப்பட்டாலும் ஓயாதிருந்தால் வெற்றி நிச்சயம் என்பதை நான் உணரச் செய்தருளும்.

◆

## ✦ பன்னிரண்டாம் நிலை

# மன்னிக்கும் மனநிலைதான் மானுடத்தின் வெற்றி

யார் சொன்னது நான் கைவிடப்பட்டவனென்று? இல்லை யில்லை! நான் கையளிக்கப்பட்டவன். என்னில் நம்பிக்கை கொள்ளும் எவரும் தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாகாமல் நிலைவாழ்வு பெறும்படி என் தந்தை என்னையே பிறருக்காக கையளித்தார். கசப்பானக் கலமாக இருந்தாலும் நானும் அதைப் பருகத் துணிந்தேன். எனவேதான் கொடூர மரணம் கூட என்னைக் கோபப்படுத்தவில்லை. சிலுவை மரணம் கூட என்னை சினம் கொள்ளச் செய்யவில்லை. வன்முறையாளர்களின் வெறியாட்டம்கூட எனக்குள் வன்மத்தை விதைக்க முடியவில்லை. வானகத் தந்தையை நோக்கி "இவர்களை மன்னியும்" என்று தான் சொல்ல முடிந்ததேயன்றி வசைமொழிகள் என் எண்ணத்தில் கூட எழவில்லை.

மன்னிக்கத் தெரிந்தவர்களால்தான் இந்த மானுடம் இன்னும் மடியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறது. கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று எல்லோரும் நினைத்திருந்தால் இந்த உலகே குருடாகிப் போயிருக்கும், முடமாகிப் போயிருக்கும். போர் மேகங்களும் ஆயுதக் கலாச்சாரமும் இந்த

உலகை அச்சுறுத்திக் கொண்டிருந்தாலும், அமைதிக்காகக் குரல் கொடுப்போரும், மன்னிக்க விழைவோரும் இல்லாமல் போகவில்லை. தன்னைச் சுட்டுக் கொல்ல நினைத்தவனை மன்னித்த மறைந்த திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால், தன் கணவரையும் குழந்தைகளையும் கண்ணெதிரே எரியூட்டியவர்களை மன்னித்த கிளாடியுஸ் ஸ்டெயின்ஸ், பலமுறைக் குத்தி தன் சகோதரியைக் கொன்றவனை மன்னித்து உடன்பிறவா சகோதரனாய் ஏற்றுக்கொண்ட அருட்சகோதரி இராணி மரியாவின் தங்கை என இன்றைக்கும் மன்னிக்க மனமுள்ள என் போன்றோரை இவ்வுலகில் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். அத்தகையோர் உள்ளவரை என் சிலுவை மரணம் வீணான ஒன்று அல்ல; அது வீர மரணம், வெற்றிக்கான மரணம். சாதாரண மனிதர்களாகிய எங்களுக்கு இப்படி மன்னிப்பது சாத்தியமில்லை என்று நீ சொல்வாயானால், உனக்கு நான் சொல்வது, "கடவுளின் அன்பார்ந்த பிள்ளைகளாய் அவரைப்போல ஆகுங்கள்... அன்பு கொண்டு வாழுங்கள்." (எபே. 5:1,2) அப்போது வாழும் போதும், வாழ்ந்த பின்பும் வெற்றியாளர்களாய் ஜொலிப்பீர்கள்.

**செபம்**

வெற்றியின் நாயகனாம் இயேசுவே! மன்னிக்கும் மனநிலை தான் மானுடத்தின் வெற்றி என்பதையும், மன்னிக்கத் தெரிந்தவன் தான் மனிதன் என்பதையும் நான் உணரச் செய்தருளும்.

◆

✦ **பதின்மூன்றாம் நிலை**

# உலகையே உறவாகப் பார்ப்போர் வெற்றி அடைவர்

யார் சொன்னது எனது அன்னை உருக்குலைந்து போனாரென்று? உள்ளம் உடைந்திருக்கும் என்பதை

மறுப்பதற்கில்லை. ஆனால் அதை அவர் அறிந்தே வாழ்ந்திருந்தார். "உமது உள்ளத்தை வாள் ஒன்று ஊடுருவும்" என சிமியோன் சொன்ன நாள் தொட்டு இன்றுவரை நான் சந்தித்த அத்தனை இடர்களையும் எதிர்ப்புகளையும் என் அன்னை கவனிக்காமல் இருந்ததில்லை. நான் அவர் பிள்ளையென்றாலும், இந்த உலகத்தை உய்விக்க தந்தைக் கடவுளால் அனுப்பி வைக்கப்பட்ட பிள்ளை என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். எனவே தான் "யார் என் தாய்?" என்று சொன்னபோதுகூட, புரிந்தும் புரியாமலும் அமைதி காத்தார். இப்போது என் உடலை அவர் மடி தாங்கியபோது முற்றிலுமாகப் புரிந்திருப்பார் - அவர் என்னைப் பெற்றெடுத்ததே பலியிடத்தான் என்பதை.

பிறருக்காகவே வாழ்வது என்பதும், பிறருக்காகவே உயிரைக் கொடுப்பது என்பதும் கடினம்தான். ஆனால் அதனையே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து மடிந்த மானுடர்களை நீயும் பார்த்திருக்கிறாய்; நானும் பார்த்து மகிழ்ந்திருக்கிறேன். தெருக்களிலே கிடந்த தொழு நோயாளரைத் தொட்டுத் தூக்கி, தன் சொந்தமெனக் கருதிய தெரசாவை அகில உலகமும் 'அன்னை' என அழைப்பது ஓர் உண்மையை உனக்கு உணர்த்தவில்லையா? உறவுகளைக் கடந்து உண்மையாய் நேசிக்கிறவர்கள் உயரத்தை மட்டும் அடைவதில்லை; உலகையே உறவாகப் பெறுகின்றார்கள். ஆன்மீக வாழ்வில் மட்டுமல்ல, சமுதாய வாழ்விலும், தியாகம் செய்யத் தயாராயிருப்போர் சிலர் இருப்பதால்தான் எல்லோராலும் நிம்மதியாய் இருக்க முடிகிறது. தங்கள் உயிரைப் பணயம் வைத்து நாட்டின் எல்லையைக் காக்கும் வீரர்கள் தொடங்கி, தம் சங்கடத்தையும் கருத்தில் கொள்ளாமல், சாக்கடையில் இறங்கி சுத்தம் செய்யும் துப்புரவுத் தொழிலாளர்கள் வரை, எத்தனையோ தியாகச் செம்மல்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். எப்போது நீ அப்படி மாறப் போகிறாய்? மறந்து விடாதே! "தம் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்து விடுவர்...

தம்மையே அழித்துக் கொள்கிற எவரும் வாழ்வடைவர்.” (மத். 16:25)

**செபம்**

வெற்றியின் நாயகனாம் இயேசுவே! தியாகம் செய்யத் துணிபவரும், உலகையே உறவாகப் பார்ப்பவரும் உறுதியாய் வெற்றி அடைவர் என்பதை நான் உணரச் செய்தருளும்.

◆

✦ **பதினான்காம் நிலை**

## சாதாரணமானவர்களும் சாதனையாளர்களே

யார் சொன்னது நான் புதைக்கப்பட்டேனென்று? இல்லை யில்லை. நான் விதைக்கப்பட்டேன். எல்லாம் முடிந்ததென்று அவர்கள் நினைத்தார்கள். எனக்கு அப்போதே தெரியும், உனக்கு இப்போது தெரிந்திருக்கும், அதுதான் ஆரம்பம் என்று. சர்வ வல்லவரான நான் சாதாரண மனிதனாய் மாட்டுத் தொழுவத்தில் பிறந்து, தச்சுத் தொழில் புரிந்து, போதகராய்த் திரிந்து, புறக்கணிக்கப்பட்டவராய் மரித்து, இரவல் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டேன். அனைத்தும் சர்வ சாதாரணமாய் முடிந்து போனது. ஆனால் ஆழ்ந்து பார்த்தால், என் சாதாரண வாழ்வுதான் சரித்திரத்தையே புரட்டிப் போட்டது.

சாதாரணமானவர்கள் என்றும் சாமானியர்கள் என்றும் நீ அசட்டை செய்யும் பலரைப் பார்த்து நான் அசந்து போயிருக்கிறேன்; அதிசயத்துப் போயிருக்கிறேன். எல்லோரும் என்னைப்போல் மீட்பராக அழைக்கப்படவில்லை. ஆனால் எல்லோரும் என் மீட்புப்பணியில் ஏதோ ஒரு விதத்தில் பங்குபெற அழைக்கப்பட்டுள்ளீர்கள். இதில் சாதாரணம் என்றும் அசாதாரணம் என்றும் எதுவுமில்லை. வியர்வை

சிந்தும் விவசாயி இல்லையெனில் உணவு இல்லை. நொடிந்து போன நெசவாளர் இல்லையெனில் உடை இல்லை. கடும் உழைப்புக்குச் சொந்தக்காரர்களான தொழிலாளர் இல்லையெனில் உறைவிடம் இல்லை. மருத்துவர்களும், பொறியாளர்களும், ஆசிரியர்களும், அதிகாரிகளும், உயர் பதவி வகிப்போரும் மானுடச் சமுதாயத்திற்கு எந்த அளவு அவசியமோ, இல்லையில்லை, அதைவிட அதிகம் அவசியமானவர்கள், அத்தியாவசியமானவர்கள் அடித்தட்டு மக்கள். சாதாரணமானவர்களும் சாதனையாளர்கள் என்பதை என் சாவும் அடக்கமும் உனக்கு உணர்த்தட்டும். நான் என் கடமையைச் செய்தேன். மானிட மீட்பு சாத்தியமாயிற்று. நீயும் உன் கடமையைச் செய்யும்போது வாழ்க்கை அர்த்தம் பெறும். சிறிதோ, பெரிதோ, அவரவர் தத்தம் கடமையை ஆற்றுகிறபோது அகிலமே அமைதியாய் இயங்கும்; அழகாய் மாறும். அதில் ஒவ்வொருவருமே சாதனையாளர்களாகவும், வெற்றியாளர்களாகவும் ஒளிர்வார்கள். இறுதியாகவும் உறுதியாகவும் நான் உனக்குச் சொல்வது இதுதான்: "நீங்கள் பெற்றுக் கொண்ட அழைப்புக்கு ஏற்ப வாழுங்கள்." (எபே. 4:1)

## செபம்

வெற்றி நாயகனாம் இயேசுவே! சாதாரணமானவர்களும் சாதனையாளர்கள் தான் என்பதையும், எங்கள் கடமையை நாங்கள் சரிவரச் செய்யும்போது நாங்களும் வெற்றியாளர்கள் தான் என்பதை நாங்கள் உணரச் செய்தருளும்.

◆

## முடிவுரை

சிலுவைப் பாதை என்றாலே சிந்தை நொந்தழுவதும், செய்த பாவத்திற்காக வருந்துவதும் மட்டுமே நமது வாடிக்கையாய் இருந்திருக்கிறது. அதில் தவறொன்றுமில்லை. நாம் எல்லோரும் பாவிகள்தான்; மனம் வருந்தித்தான் ஆகவேண்டும். ஆனால் இயேசு மட்டும் சாவினை வென்று,

உயிர்த்த ஆண்டவராய் மாண்புற்றிருக்கவில்லை என்றால் இந்தச் சிலுவைப்பாதை என்கிற பக்தி முயற்சியே பிறவாமல் போயிருக்கும். நாம் வாழ்வு பெறும் பொருட்டும், அதை நிறைவாகப் பெறும் பொருட்டும் வந்தவர் அல்லவா இயேசு! எனவேதான் தன் பாடுகளின் பாதையிலும், நமது வெற்றிக்கான பாடங்களையும், மானுட வாழ்வின் மாண்பு நிறை பரிமாணங்களையும் நமக்குச் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த மாண்புநிறை மனித வாழ்வுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம். அந்த மாண்பை எந்நாளும் காப்போம். அப்போதுதான் இயேசுவின் பாடுகளிலும், மரணத்திலும் உயிர்ப்பிலும் வெறும் பார்வையாளர்களாக அல்லாமல் பங்காளர்களாக மாறுவோம். அப்போதுதான் அவரைப்போல் வெற்றியாளர்களாகவும் உருமாறுவோம்.

◆